# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.NO. 243/2022 |
| Prosecution Witness | : | அ.சா.7 |
| Name | : | மல்லிகா |
| Father's / Husband Name | : | மணிகண்டன் |
| Address | : | கருடமங்களம், திருச்சி மாவட்டம். |
| Age | : | 44/2025 |

**தேதி : 06.05.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு மூன்று பையன்கள். என்னுடைய நடு மகன் பெயர் மதியழகன். எதிரி கண்ணன் என்பவரை எனக்கு தெரியும். ் அவர் எங்கள் ஊருக்கு வருடத்திற்கு ஒருமுறை வருவார். கடந்த 2020ம் ஆண்டு கண்ணன் எங்கள் ஊருக்கு வந்திருந்தார். என்னுடைய குடும்ப சூழ்நிலையை அவர் தெரிந்துகொண்டு என்னிடம் ரூ. 20,000/- பணம் கொடுத்துவிட்டு என்னுடைய மகன் மதியழகனை ஆடு மேய்பதற்காக அழைத்துகொண்டுசென்றுவிட்டார். ஒரு வருடம் ஆடு மேய்க்க வேண்டுமென்று அழைத்துசென்றார். இரண்டு நாட்கள் கழித்து போலீஸார் என்னுடைய மகனை மீட்டுவைத்திருப்பதாக சொன்னார்கள். நானும், என்னுடைய கணவரும் பெரம்பலூருக்கு வந்தோம். என்னுடைய மகன் குழந்தைகள் நல குழுவில் இருந்தார். அவர்கள் என்னிடம் என்னுடைய மகனை ஒப்படைத்தார்கள்.

நானும், எனது கணவரும் என்னுடைய மகனை எங்கள் ஊருக்கு அழைத்துசென்றுவிட்டோம். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

இருபது ஆயிரம் கொடுத்துவிட்டு என்னுடைய மகனை ஆடு மேய்க்க அழைத்து சென்றதாக போலலீஸார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கண்ணன் என்பவர் வருடத்திற்கு ஒருமுறை எங்கள் ஊருக்கு வருவார் என்ற விவரத்தை போலீஸார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய மகனுக்கு முன்பு எங்களுடைய குடும்பத்தில் வேறு யாரையும் ஆடு மேய்க்க அனுப்பவில்லை. தற்சமயம் நீதிமன்றத்தில் உள்ள காவலர் பூங்கொடி என்பவர் என்னை போன் செய்து என்னுடைய மகனை அழைத்துபோக வரச்சொன்னாரா என்றால் அந்த சமயத்தில் யார் சொன்னார்கள் என்று ஞாபகமில்லை. என் மகன் இரண்டு நாட்கள் ஆடு மேய்த்தான். என்னுடைய மகனை விசாரணை முடித்து எப்போது ஊருக்கு அழைத்துசென்றோம் என்றால் ஞாபகமில்லை.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.